DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.33/2019**

அ.சா.6

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | சுரேஷ்குமார் | Caste: | |
| Father's Name: | முருகேசன் | Calling: | விவசாயம் |
| Village: | கந்தசாமிபுரம் | Religion: | |
| Taluk: | முதுகுளத்தூர் | Age: | 34 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 15.09.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் முதுகுளத்தூர் கந்தசாமிபுரத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சம்பவ காலத்தில் முதுகுளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் Data Entry Operator ஆக வேலை செய்து வந்தேன். சாட்சிகள் ஜெகதீஷ்குமார், ஆறுமுகம் ஆகியோரை தெரியும். சாட்சி கௌரி மனோகரி என் உடன் பிறந்த சகோதரி. சாட்சிகள் ராகினி, இளமாறன், குறள்ராஜன் ஆகியோர்களை தெரியும். எதிரிகளை தெரியும். அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். நான் இந்து தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர். எதிரிகள் மறவர் சமூகத்தை சார்ந்தவர்கள். ஜெகதீஷ்குமார், ஆறுமுகம் ஆகியோர்கள் இந்து தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர்கள். கடந்த 08.12.2018 ம் தேதி இரவு 10.30 மணியளவில் முதுகுளத்தூர் – தேரிருவேலி ரோட்டில் பவித்ரா கிளினிக் எதிரே உள்ள ஸ்டுடியோவில் நானும் எனக்கு தெரிந்த

இளமாறனும் பேசிக்கொண்டிருந்தோம். பூங்கதிர்வேல் ஒரு இரும்பு ராடை வைத்து பவித்ரா கிளினிக் கேட்டை ஓங்கி அடித்தார். கிளினிக்கில் இருப்பவர்களை பார்த்து ஏன்டா பள்ள தேவுடியா மகனே வெளியிலே வாடா என்று சொன்னார். பள்ளப்பயல்கள் எல்லாம் இங்கு வந்து கிளினிக் வைக்க முடியுமாடா என்று பேசியதும் ஜெகதீஷ்குமார் வெளியே வந்தார். அவரை 1ம் எதிரி அடிக்க சென்றார். நானும் இளமாறனும் சென்று விலக்கிவிட்டோம். போகும்போது 1ம் எதிரி தான் வைத்திருந்த இரும்பு ராடை காண்பித்து உன்னையும் உன் அப்பனையும் என்றைக்கு இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு அவர் வந்த பதிவெண் இல்லாத டாடா ஹெக்ஷா வெள்ளை நிற காரில் ஏறி சென்றுவிட்டார். அதன்பின்பு நானும் இளமாறனும் ஜெகதீஷ்குமாரிடம் என்ன பிரச்சனை ஏன் வந்து பிரச்சனை செய்துவிட்டு போகிறார் என்று கேட்டோம். அப்போது ஜெகதீஷ்குமார் பூங்கதிர்வேலின் மைத்துனர் மருதுபாண்டி இரண்டு நாட்களுக்கு முன்பாக அவரின் குழந்தைக்கு மருத்துவர் பார்க்க வந்துள்ளார் என்றும், மருத்துவம் பார்த்துவிட்டு மறுநாள் காய்ச்சல் சரியாகவில்லை என்பதால் ஜெகதீஷ்குமாரின் தந்தையான மருத்துவர் ஆறுமுகத்திடம் சண்டைபோட்டு சென்றதாகவும் கூறினார். அதற்கு மறுநாள்தான் இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக கூறினார். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரும்பு ராடை வைத்துதான் பூங்கதிர்வேல் பவித்ரா கிளினிக்கின் கேட்டை உடைத்தார். இதுசம்பந்தமாக முதுகுளத்தூர் டிஎஸ்பி என்னை மறுநாள் விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

எனது சொந்த ஊர் முதுகுளத்தூர் சுடலையூரணி கந்தசாமிபுரம் என்றால் சரிதான். அதனால் முதுகுளத்தூர் பற்றி எனக்கு நன்கு தெரியும்

என்றால் சரிதான். மருத்துவர் ஆறுமுகம் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக முதுகுளத்தூரில் மருத்துவமனை நடத்திவருகிறார் என்றால் சரிதான். அவர் தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர் என்றாலும் எல்லா சமூக மக்களுக்கும் மருத்துவம் பார்ப்பார் என்றால் சரிதான். எல்லா சமூக மக்களுடனும் அவர் சுமூக உறவு வைத்திருந்தார் என்றால் சரிதான். மருத்துவர் ஆறுமுகம் சாதி சங்கத்தில் ஈடுபட மாட்டார், பொதுவான நபராகத்தான் செயல்படுவார் என்றால் தெரியாது. மருத்துவர் ஆறுமுகத்தை எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் எங்கள் சமூகத்தை சேர்ந்தவராக நாங்கள் கருதுவதில்லை என்றும் அவரை மேல்தட்டு வர்க்கமாகத்தான் பார்ப்போம் என்றால் சரிதான். அவரும் மேல்தட்டு வர்க்க நபரைப் போல்தான் நடந்துகொள்வார் என்றால் சரிதான். மருத்துவர் ஆறுமுகத்தை மற்ற சமூகத்தை சேர்ந்தவர்கள் அவரை தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர் என்ற முறையில் பார்த்ததில்லை என்றால் சரிதான். பவித்ரா கிளினிக் அமைந்துள்ள தேரிருவேலி ரோட்டில் பல்வேறு சாதி மக்களும் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் சம்பவ சமயத்தில் முதுகுளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் Data Entry Operator ஆக வேலை செய்தேன். தற்போது இல்லை. நான் முறையற்ற வகையில் வேலை செய்தேன் என்பதால்தான் என்னை பணிநீக்கம் செய்தார்கள் என்றால் சரியல்ல. என் தங்கை கௌரி மனோகரியை மருத்துவர் ஆறுமுகத்திடம் நான்தான் வேலைக்கு சேர்த்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனக்கும் மருத்துவர் ஆறுமுகத்துக்கும் ஒரே சாதியை சேர்ந்தவர் என்ற முறையிலும் எனக்கு உள்ள பழக்கவழக்கத்தின் அடிப்படையில்தான் என் சகோதரியை அங்கு வேலைக்கு சேர்த்துவிட்டேன் என்றால் சரியல்ல. முதுகுளத்தூர்– தேரிருவேலி

செல்லும் சாலையில் சாயல்குடி விலக்கு ரோட்டில் 10 கடை தள்ளிதான் பவித்ரா கிளினிக் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதைத்தாண்டி சுமார் 10 கடை தள்ளிதான் சுடலையூரணி செல்லும் பாதை உள்ளது என்று சொன்னால் சரிதான். பணிமுடிந்து இரவு நேரங்களில் ஊரைச் சுற்றும் பழக்கம் இல்லை என்றால் சரியல்ல, டீ சாப்பிட வருவோம். சுடலையூரணி செல்லும் பாதையில் நான் நின்றிருக்கும் பட்சத்தில் வளைவான பாதை என்பதால் நான் வழக்கு சம்பவத்தை பார்ப்பதற்கான வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கும்போது 08.12.2018 ம் தேதிதான் பூங்கதிர் வேல் சகோதரி திலகவதி மற்றும் அவரது கணவரும் தனது குழந்தையை பவித்ரா கிளினிக்கிற்கு அழைத்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லியுள்ளதாக உள்ளது. 06.12.2018 ம் தேதி அன்று மாலை திரும்ப குழந்தைக்கு காய்ச்சல் குறையவில்லை என்று குழந்தையை மருத்துவமனைக்கு அழைத்து வந்து சிகிச்சை அளித்த விவரத்தை டாக்டரிடம் சொல்லியபிறகு மருத்துவர் எழுதிக்கொடுத்துளளார் என போலிஸ் விசாரணையில் நான் சொன்னதாக உள்ளது என்றால் சரிதான். 07.12.2018 ம் தேதி மருதுபாண்டியும் திலகவதியும் மருத்துவமனைக்கு வந்து குழந்தைக்கு என்ன வைத்தியம் பார்த்தாய் என்னுடைய குழந்தைக்கு காய்ச்சல் சரியாகவில்லை என சத்தம் போட்டார்கள் என்று போலிஸ் விசாரணையில் நான் சொன்னதாக உள்ளது என்றால் சரிதான். பொதுவாக தேதிகள் 6,7,8 என்றுதான் வரும். ஆனால் மாறாக 8 ம்தேதி மருத்துவம் பார்த்ததாகவும், 6 ம் தேதி பரிந்துரை சீட்டில் எழுதி வாங்கியதாகவும், 7 ம் தேதி தகராறு செய்ததாகவும் முன்னுக்கு பின் முரணாக வாக்குமுலங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் அதற்கு காரணம் நாங்கள் டாக்டருக்கு வேண்டியவர்கள் என்பதால்

அதனடிப்படையில் அக்கறை உள்ள சாட்சி என பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எதிரிகள் கம்பி கேட்டை கம்பியால் வைத்து உடைக்கவில்லை, சாதியை சொல்லி அசிங்கமாக பேசவில்லை என்றும், நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. குழந்தைகக்கு முறையாக சிகிச்சை அளிக்கவில்லை என மருத்துவர் ஆறுமுகத்தின்மீது நடவடிக்கை எடுக்கக்கோரி காவல்நிலையத்திலும் சென்னை உயர்நீதிமன்றத்திலும் எதிரிகளால் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அதிலிருந்து தப்பிப்பதற்காக ஒரு பொய்யான புகாரை கொடுத்தார் என்றும், அதற்கு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக நீதிமன்றத்தில் உள்ள இரும்பு ராடு கடையில் கிடைக்கக்கூடிய ஒன்றுதான் என்றால் சரிதான். வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.33/2019**

அ.சா.7

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | இளமாறன் | Caste: | |
| Father's Name: | பிரபாகரன் | Calling: | ஸ்டுடியோ தொழில் |
| Village: | சுடலையூரணி பாதை | Religion: | |
| Taluk: | முதுகுளத்தூர் | Age: | 47 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 15.09.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் முதுகுளத்தூர் சுடலையூரணி பாதையில் வசித்து வருகிறேன். முதுகுளத்தூரில் இருந்து தேரிருவேலி செல்லும் ரோட்டில் ஸ்டுடியோ வைத்துள்ளேன். சாட்சிகள் ஜெகதீஷ்குமார், ஆறுமுகம், கௌரி மனோகரி ராகினி, குறள்ராஜன் ஆகியோர்களை தெரியும். எதிரிகளை தெரியும். அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். நான் இந்து தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர். எதிரிகள் மறவர் சமூகத்தை சார்ந்தவர்கள். ஜெகதீஷ்குமார், ஆறுமுகம் ஆகியோர்கள் இந்து தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர்கள். கடந்த 08.12.2018ம் தேதி இரவு 10.30 மணியளவில் நானும் சுரேஷ்குமாரும் என் ஸ்டுடியோ முன்பு பேசிக்கொண்டிருந்தோம். அப்போது பவித்ரா கிளினிக்கில் உள்ள கேட்டை ஒரு நபர் ஏன்டா பள்ள புண்டை மகனே வெளியே வாடா என்று சொல்லி அடித்தார். மேலும் கிளினிக்கின் உள்கதவை மேற்படி ராடால்

அடித்து பள்ள பயல்கள் எல்லாம் இங்கு கிளினிக் வைத்து நடத்த முடியுமாடா என்று பேசினார். டாக்டர் மகன் ஜெகதீஷ்குமார் வெளியில் வந்தார். அவரை இரும்பு கம்பியால் 1ம் எதிரி பூங்கதிர்வேல் தாக்க முற்பட்டார். நானும் சுரேஷ்–ம் விலக்கிவிட்டோம். வெளியே வந்த பூங்கதிர்வேல் இன்னைக்கு தப்பித்துவிட்டாய் என்றைக்கு இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று பதிவெண் இல்லாத வெள்ளை காரில் ஏறி கிளம்பிவிட்டார். பூங்கதிர்வேலை நேரில் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். நானும் சுரேஷ்குமாரும் ஜெகதீஷ்குமாரிடம் என்ன பிரச்சனை என்று கேட்டோம். இரண்டு நாட்களுக்கு முன்பு மருதுபாண்டி என்பவர் தன் குழந்தைக்கு மருத்துவர் பார்க்க வந்ததாகவும், மருந்து கொடுத்தும் காய்ச்சல் நிற்கவே இல்லை என்பதால் தகராறு செய்ததாகவும், இருடா என் மைத்துனரை வரச்சொல்கிறேன் என்று போய்விட்டார். பின்பு 8.12.2018ம் தேதி இரவு 10.30 மணிக்கு மேலே சொன்ன சம்பவத்தை மருதுபாண்டியின் மைத்துனர் பூங்கதிர்வேல் நிகழ்த்தியதாகவும் சொன்னார். பூங்கதிர்வேல் பயன்படுத்திய இரும்பு ராடை என்னால் அடையாளம் காட்ட முடியும். நீதிமன்றத்தில் உள்ள இரும்பு ராடுதான் அது. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை மறுநாள் விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நான் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவன் என்றால் இல்லை. நான் 2014ம் வருடத்தில் தேவேந்திர குல வேளாளர் சங்கத்தில் பொருளாளராக இருந்தேன். ஆரம்ப காலகட்டத்தில் இருந்து முதுகுளத்தூரில்தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். முதுகுளத்தூரில் தேரிருவேலி முக்கு ரோடு பகுதி தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர்கள் வசிக்கும் பகுதி என்றால் சரியல்ல. எனது கடை தேரிருவேலி முக்கு

ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். நான் இயல்பாக இரவு 8.00 மணியளவில் ஸ்டுடியோவை அடைத்துவிடுவேன் என்றால் சரியல்ல இரவு 10.30 மணி வரை வைத்திருப்பேன். மருத்துவர் ஆறுமுகத்திற்கு பரமக்குடியில்தான் வீடு உள்ளது என்றால் சரிதான். மருத்துவர் ஆறுமுகம் பரமக்குடியில் இருந்துதான் தினமும் வந்து செல்வது வழக்கம் என்றால் சரிதான். அவர் மகன் ஜெகதீஷ்குமார் மருத்துவர் கிடையாது என்றால் சரிதான். ஜெகதீஷ்குமார் பொறியாளர் என்றால் சரிதான். ஜெகதீஷ்குமார் பொறியாளர் என்பதால் மருத்துவமனைக்கு வரவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். சொன்ன மாதிரி சொன்ன தேதியில் ஜெகதீஷ்குமார் மருத்துவமனையில் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கும்போது 08.12.2018 ம் தேதிதான் மருதுபாண்டியும் அவரது மனைவியும் குழந்தையை பவித்ரா கிளினிக்கிற்கு சிகிச்சைக்காக அழைத்து வந்ததாகவும் அதை நாங்கள் பார்த்தாகவும் சொல்லியுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். 06.12.2018 ம் தேதி மருதுபாண்டியும் அவரது மனைவியும் திரும்ப காய்ச்சல் குறையவில்லை என மருத்துவரிடம் வந்ததாகவும் பரிந்துரை சீட்டில் மருந்து மாத்திரைகள் எழுதிக்கொடுத்ததாகவும், 07.12.2018 ம் தேதி காய்ச்சல் குறையவில்லை என்று தகராறு செய்ததாகவும், அதை மருத்துவர் பெரிதாக எடுத்துககொள்ளவில்லை என்றும் போலிஸ் விசாரணையில் 08.12.2018 ம் தேதி சிகிச்சைக்கு வந்ததை நானும் சுரேஷ்குமாரும் பார்த்தாக சொல்லியுள்ளோம் என்றும் தகராறு நடந்ததாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. மருத்துவர் ஆறுமுகம் 30. ஆண்டுகளுக்கு மேலாக முதுகுளத்தூரில் கிளினிக் நடத்திவருகிறார் என்றால் சரிதான். அவர் சாதி அடிப்படையில் நடந்துகொள்ள மாட்டார்

என்றால் சரிதான். நாங்களும் அவரை பொதுவான நபராகத்தான் பார்ப்போம் என்றும், மற்ற சமூகத்தை சேர்ந்தவர்களும் அவரை சாதி பாகுபாடு பார்க்காமல்தான் நடந்துகொள்வார்கள் என்றும், அவரை தன்னை தான் இந்த சமூகத்தை சேர்ந்தவர் என்று காட்டிக்கொண்டதில்லை என்றால் சரிதான். எதிரிகள் மருத்துவர் ஆறுமுகத்தை சாதியை சொல்லி அசிங்கமாக திட்டவில்லை என்றும், குழந்தைக்கு சரியான வைத்தியம் பார்க்கவில்லை என்பதால் தன்மீது வழக்கு தொடுத்துவிடுவார்கள் என்றும் அதிலிருந்து தப்பிப்பதற்காக ஒரு பொய்யான புகாரை கொடுத்துள்ளார் என்றும் அவரது கிளினிக் அருகே வசிப்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமனற்த்தில் உள்ள இரும்பு ராடு வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாதாரணமாக இரும்பு கடையில் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான். வழக்கிற்கும் இந்த எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.33/2019**

அ.சா.8

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | இமானுவேல் | Caste: | |
| Father's Name: | வேதமாணிக்கம் | Calling: | விவசாயம் |
| Village: | தேவேந்திரர் நகர், முதுகுளத்தூர் | Religion: | |
| Taluk: | முதுகுளத்தூர் | Age: | 60 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 15.09.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் முதுகுளத்தூர் தேவேந்திர் நகரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். முதுகுளத்தூர் திடல் தெருவை சேர்ந்த அப்துல்லாவை தெரியும். கடந்த 09.12.2018ம் தேதி காலை 9.00 மணியளவில் நான் வீட்டிலிருந்து முதுகுளத்தூருக்கு வந்துகொண்டிருந்தேன். அப்போது பவித்ரா கிளினிக் அருகே கூட்டமாக இருந்தது. பவித்ரா கிளினிக்கை டாக்டர் ஆறுமுகம் நடத்தி வந்தார். அப்துல்லாவும் அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தார். அவரிடம் என்ன கூட்டமாக இருக்கிறது என்று விசாரித்தபோது அவரும் தெரியவில்லை, சண்டை நடந்துள்ளதுபோலும் என்று சொன்னார். அப்போது முதுகுளத்தூர் டிஎஸ்பி அங்கு வந்து படம் வரைந்து போட்டோ எடுத்துகொண்டிருந்தார். எங்கள் இருவரையும் உள்ளூர்தானா என்று விசாரித்தார், ஆமாம் என்று சொன்னோம். அவர் சாட்சிக்கு கையெழுத்துபோடும்படி கேட்டார்.

நாங்களும் போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என் கையெழுத்து. 2ம் கையெழுத்து அப்துல்லாவுடையது. பார்வை மகசர் **அ.சா.ஆ.2**. மேலும் அந்த இடத்தில் கிடந்த சில்வர் பூட்டு ஒன்றையும், உடைந்த கிராதி ஒன்றையும் எடுத்து காண்பித்து அதையும் கைப்பற்றினார். அதற்கு ஆதரவாக கையெழுத்து போடும்படி கேட்டார். அந்த பொருட்களை கைப்பற்றும்போது மணி 9.50 இருக்கும். நீதிமன்றத்தில் உள்ள பூட்டும் கிராதியும்தான் டிஎஸ்பி எங்கள் முன்னிலையில் கைப்பற்றியது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். 2வது கையெழுத்து அப்துல்லாவுடையது. அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.3.** இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நான் வசிக்கும் தேவேந்திரர் நகர் நரிவண்டல் விளையாட்டு திடல் அருகில் உள்ளது என்றால் சரிதான். நான் வசிக்கும் இடத்திலிருந்து பவித்ரா கிளினிக் 1கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் வருவதற்கு முன்பே அங்கு 10 நபர்களுக்கு மேல் இருந்தார்கள் என்றால் சரிதான். அங்கு என்ன பிரச்சனை நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தற்போது பார்வை மகசரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆனால் நான் கையெழுத்து போடும் சமயத்தில் டிஎஸ்பி படித்துக் காண்பித்தார். எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான்.சம்பவ இடத்தை சுற்றி யார் யார் வீடு, கடைகள் உள்ளன என்பது தெரியாது என்றால் சரிதான். அத்தாட்சியில் சொல்லப்பட்டுள்ள நேரம் அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் உள்ள விவரங்கள் தெரியாது என்றால்

அப்போது டிஎஸ்பி படித்து காண்பித்தார். மருத்துவர் ஆறுமுகம் எனக்கு நல்ல தெரிந்த பரிட்சயமான நபர் என்றால் சரிதான். நான் எங்கள் ஊர் தேவேந்திர குல வேளாளர் சமூக தலைவர் என்றால் சரிதான். ஊர் பிரச்சனைகளுக்காக நான் காவல்நிலையத்திற்கு செல்வேன் என்றால் சரிதான். நான் காவல்நிலையத்திற்கு சென்றபோது டாக்டர் ஆறுமுகம் எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில வைத்து போட்டேன் என்றால் சரியல்ல. பூட்டு மற்றும் உடைந்த கிராதி சாதாரணமாக கிடைக்கக்கூடியது என்றும் நான் சொன்ன மாதிரி சொன்ன தேதி நேரத்தில் வைத்து டிஎஸ்பி என் முன்னிலையில் வைத்து கைப்பற்றவில்லை, அந்த இடத்தில் வைத்து நான் அத்தாட்சியில் கையெழுத்து செய்யவில்லை என்றும் வழக்கிற்காக அத்தாட்சி தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பொய்யாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)